**தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (மேல்நிலைக்கல்வி) செயல்முறைகள்,**

ந.க.எண். 6451 /W3 /S1/2021, நாள்: 29 –01–2021.

பொருள்– பள்ளிக்கல்வி – தமிழ்நாடு மேல்நிலைக் கல்விப்பணி – 2 சதவிகித ஒதுக்கீட்டின்படி அமைச்சுப் பணியிலிருந்து பணி மாறுதல் மூலம் முதுகலை ஆசிரியராக நியமனம் செய்ய பணியாளர்களின் பெயர் பட்டியல் அனுப்புதல் – தொடர்பாக.

பார்வை– தமிழ்நாடு மேல்நிலைக் கல்விப்பணி சிறப்பு விதிகள் அரசிதழ் எண்.36 வெளியிடப்பட்ட நாள்.30.01.2020.

------

பள்ளிக்கல்வித்துறையில் பணிபுரியும் அமைச்சுப்பணியாளர்களுக்கு 2% ஒதுக்கீட்டு அடைப்படையில் பணிமாறுதல் மூலம் முதுகலை ஆசிரியர்களாக நியமனம் வழங்குவது தொடர்பாக பணியாளர்களின் பெயர் பட்டியல் இத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்படுகிறது.

இப்பெயர் பட்டியலில் உள்ள பணியாளர்களின் விவரங்களை சரிபார்த்து உறுதி செய்திடவும், இப்பெயர் பட்டியலில் சேர்க்கை, நீக்கம் மற்றும் திருத்தம் ஏதும் இருப்பின் பார்வையில் காண் அரசிதழின்படி வெளியிடப்பட்டுள்ள தமிழ்நாடு மேல்நிலைக்கல்விப்பணி சிறப்பு விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நடைமுறைகளை பின்பற்றி அளித்திடவும் மற்றும் இவ்விதியில் " Must have obtained a Bachelor's degree and Master's degree in the same subjects or their equivalent in respect of which recruitment is made." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு எந்தப்பாடத்திற்கு முதுகலை ஆசிரியராக பணி மாறுதல் மூலம் நியமனம் செய்ய பட்டியலில் சேர்க்கப்படுகிறாரோ அப்பணியாளர் அப்பாடத்தில் இளங்கலை மற்றும் முதுகலையில் முதன்மைப் பாடமும் மற்றும் பி.எட். பயின்றிருக்க வேண்டும்.

2013–2014 ஆம் ஆண்டுவரை வரை தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் தெரிவு செய்யப்பட்டு பணியில் சேர்ந்துள்ள உதவியாளர் /சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–3 / இளநிலை உதவியாளர்/ தட்டச்சர் மற்றும் 31.12.2014க்குள் பதவி உயர்வு பெற்றவர்கள், கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டவர்கள் மற்றும் அலகுவிட்டு அலகு, துறை மாறுதல் மூலம் பணியில் சேர்ந்தவர்களில் பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் முடித்த பணியாளர்கள் சார்பான விவரங்கள் மட்டுமே பட்டியலில் சேர்க்கவேண்டும்.

பார்வையிற்காண் அரசிதழின்படி வெளியிடப்பட்டுள்ள தமிழ்நாடு மேல்நிலைக்கல்வி சிறப்புவிதிகளில் உள்ள நடைமுறைகளை பின்பற்றி அமைச்சுப்பணியிலிருந்து முதுகலை ஆசிரியராகப் பணி மாறுதல் மூலம் நியமனம் செய்வதற்கான பணியாளர்களின் பெயர் பட்டியலை எவ்வித தவறும் இன்றி உரிய படிவத்தில் Excel Format ஆங்கிலத்தில் பூர்த்தி செய்த குறுந்தகடு , முதன்மைக்கல்வி அலுவலரின் கையொப்பமிட்ட அச்சு நகல் மற்றும் கூடுதலாக சேர்க்கப்படும் பணியாளர்களின் கல்விச்சான்று, இதர சான்றுகளுடன் மற்றும் திருத்தம் செய்யவேண்டிய பணியாளர்கள் இருப்பின் அது அவர்கள் சார்ந்த சான்றுகளுடனும் பிரிவு உதவியாளர்கள் மூலமாக 02.02.2021க்குள் W3 பிரிவில் நேரில் ஒப்படைக்க வேண்டுமென அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களையும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், இப்பட்டியலில் விதிகளுக்கு முரணாக பெயர் சேர்க்க பரிந்துரைத்தாலோ அல்லது பெயர் விடுபட்டதாகத் தெரிவித்து எந்த பணியாளரிடமிருந்து முறையீடு ஏதும் பின்னர் பெறப்பட்டாலோ அதற்கு சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலரே முழுப் பொறுப்பையும் ஏற்க நேரிடும் எனவும் குறிப்பிட்ட நாளில் பெயர்பட்டியலினை தவறாமல் ஒப்படைக்க வேண்டும் எனவும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

29.1.21.

இணை இயக்குநர்(மேல்நிலைக்கல்வி).

பெறுநர்
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
அனைத்து கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்கள் (அகஇ)

நகல்

1) மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித் திட்டம், சென்னை–6 அவர்களுக்குப் பணிந்தனுப்பப்படுகிறது
2) இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை–6 அவர்களுக்குப் பணிந்தனுப்பப்படுகிறது.
3) இயக்குநர், மாநில வயது வந்தோர் மற்றும் முறைசாரா கல்வித் திட்டம், சென்னை–6 அவர்களுக்குப் பணிந்தனுப்பப்படுகிறது.
4) இயக்குநர், தொடக்கக்கல்வி இயக்ககம், சென்னை –6 அவர்களுக்குப் பணிந்தனுப்பப்படுகிறது.
5) கண்காணிப்பாளர், அ2,அ3 மற்றும்அ4 பள்ளிக்கல்வி இயக்ககம், சென்னை–6.